# செய்தி வெளியீடு

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் இணையவழி பட்டா மாறுதல் சேவையில் வீடு மனை வாங்குவோர் போன்ற சொத்துக்களுக்கு பட்டா பெயர் மாற்றம் கோரி அளிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள், சரிபார்ப்பு பணிகள் முடிந்தும் அதிகாரிகளின் இறுதி முடிவுக்காக மூன்று மாதங்களுக்குமேல் காத்திருப்பதாக மக்கள் புகார் என வெளியிடப்பட்ட செய்தி குறித்த வருவாய்த்துறையின் அறிக்கை.

1) இணையவழி பட்டா மாறுதல் உட்பிரிவு அல்லாத இனங்களில் (NISD) 01.04.2024 முதல் 08.11.2024 வரை பெறப்பட்ட 16,41,019 மனுக்களில், 1565085 மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, இன்றைய நிலையில் 75934 மனுக்கள் நிலுவையில் உள்ளன, இவற்றில் 83 மனுக்கள் மட்டுமே 3 மாதங்களுக்கு மேல் நிலுவையில் உள்ளன.

2) இணையவழி பட்டா மாறுதல் உட்பிரிவு இனங்களில் (ISD) 01.04.2024 முதல் 08.11.2024 வரை வரப்பெற்ற 14,02,160 மனுக்களில், 12,02,305 மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, இன்றைய நிலையில் 1,99,855 மனுக்கள் நிலுவையில் உள்ளன, இவற்றில் 1907 மனுக்கள் மட்டுமே 3 மாதங்களுக்கு மேல் நிலுவையில் உள்ளன.

3) இணையவழி பட்டா மாறுதல் மனுக்களின் மீது விரைவாக நடவடிக்கை மேற்கொள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:

Padasalai.Net

i) மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களுடன் அரசு முதன்மை செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நில நிருவாக ஆணையர் மற்றும் இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம் ஆகியோரால் 15 நாட்களுக்கு ஒருமுறை ஆய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு, அக்கூட்டத்தில் இணைய வழி பட்டா மாறுதல் உட்பிரிவு அல்லாத இனங்களை (NISD) மனுக்கள் மீது 15 தினங்களுக்குள்ளும்,, இணைய வழி பட்டா மாறுதல் உட்பிரிவு (ISD) மனுக்கள் மீது 30 நாட்களுக்குள்ளும், நடவடிக்கை மேற்கொண்டு முடிவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி நடவடிக்கைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

ii) மாதந்தோறும் அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அரசு முதன்மை செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நில நிருவாக ஆணையர், இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடன் ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டு, இணைய வழி பட்டா மாறுதல் உட்பிரிவு இனங்கள் மற்றும் உட்பிரிவு அல்லத இனங்கள் மீது நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் நடவடிக்கை மேற்கொண்டு மனுக்களை விரைந்து முடிக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

iii) மேலும், இணைய வழி பட்டா மாறுதலில் உள்ள நடைமுறை சிக்கல்களை எளிமைப்படுத்தவும், பட்டா மாறுதல் மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவும், அரசு கடித எண். 1110/SS-II(2)/2024-1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள். 24.01.2024-ன்படி அமைக்கப்பட்ட உயர்மட்ட அலுவலர்களைக்

Padasalai.Net

கொண்ட simplification committee பரிந்துரைகளின் அடிப்படையில் இணைய வழி பட்டா மாறுதல் மனுக்கள் மீது விரைந்து தீர்வு காண கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

NP 1) நகர்ப்புற பகுதிகளில் இணைய வழி பட்டா மாறுதல் உட்பிரிவு அல்லாத இனங்களில் நகர சார் ஆய்வாளர் தணிக்கை மேற்கொண்டு இணையவழியாக சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் அடுத்த நிலையில் வட்ட ஆவண வரைவாளர் மூலமாக பரிசீலனை செய்யப்பட்டு துணை வட்டாட்சியருக்கு பரிந்துரை செய்யப்பட்டு வந்த நடைமுறையினை மாற்றி வட்ட ஆவண வரைவாளரின் நிலையினை நீக்கம் செய்து நேரிடையாக துணை வட்டாட்சியருக்கு அறிக்கையினை சமர்ப்பிக்கும் நடைமுறை பின்பற்றி உடன் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

NP 2) மனுதாரர் இணைய வழி பட்டா மாறுதல் ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களில் பெறப்படும் உட்பிரிவு (ISD) இனங்கள் அல்லது உட்பிரிவு அல்லாத (NISD) இனங்கள் மீது பட்டா கோரி விண்ணப்பம் செய்யப்படும் மனுக்களை வரிசைகிரமமாக (first in first out), முதலில் பெறப்படும் மனுக்கள் மீது முதலில் நடவடிக்கை மேற்கொண்டு உடன் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

NP 3) இணைய வழி பட்டா மாறுதல் உட்பிரிவு அல்லத இனங்கள் (NISD) கிராம நிருவாக அலுவலர் மற்றும் நில அளவர்களால் தணிக்கை மேற்கொண்டு பரிந்துரை செய்யப்படும் மனுக்கள் மீது உத்தரவு பிறப்பிக்கப்படக்கூடிய மண்டல துணை வட்டாட்சியர் அவர்களிடம் மனுக்கள் அதிகமாக செல்வதினால் ஏற்படும் நடைமுறை காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, தலைமையிடத்து துணை வட்டாட்சியருக்கும் இக்கோப்புகளை அங்கீகரிக்கப்பதற்குண்டான பணி

Padasalai.Net

பகிர்மானம் உத்தரவு அரசாணை (நிலை) எண். 154, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள். 07.06.2024–ன்படி பிறப்பிக்கப்பட்டு, அதன்படி கோப்புகளை உடன் அங்கீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4) மேலும், அரசாணை (நிலை) எண். 84, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள். 04.02.2020–ன்படி பிறப்பிக்கப்பட்ட அரசாணையின்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு செய்தவுடன் தானியங்கி முறையில் கிரையம் பெற்ற நபர் மீது பட்டா மாறுதல் உட்பிரிவு அல்லத இனங்கள் (NISD) உடன் மேற்கொள்ளும் நடைமுறை 23.02.2021ல் கொண்டுவரப்பட்டு இதுவரை 769849 மனுக்கள் பெறப்பட்டு, 712679 மனுக்கள் மீது உடன் தீர்வு காணப்பட்டு மனுதாரர்களுக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது.

எனவே, இணையவழி பட்டா மாறுதலில் துரித நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களின் மனுக்கள் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட**
**இயக்குநர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu

Padasalai.Net